# நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 2-6 - வைகுந்தா
## (ஆழ்வாரது நைச்யாநுஸந்தானத்தைக் கண்டு எம்பெருமான் இவரது பிரிவைச் சங்கித்து நைய, ஆழ்வார் அச்சங்கையைப் போக்குதல்)

2840 * வைகுந்தா! மணிவண்ணனே! * என் பொல்லாத் திருக்குறளா! என்னுள் - மன்னி *
வைகும் வைகல் தோறும் * அமுதாய வானேறே! **
செய்குந்தா வருந்தீமை உன் அடியார்க்குத் தீர்த்து * அசுரர்க்குத் தீமைகள்
செய்குந்தா! * உன்னை நான் பிடித்தேன் கொள் சிக்கெனவே 1

2841 சிக்கெனச் சிறிதோரிடமும் * புறப்படாத் தன்னுள்ளே * உலகுகள்
ஒக்கவே விழுங்கிப் * புகுந்தான் புகுந்ததற்பின் **
மிக்க ஞான வெள்ளச் சுடர்விளக்காய்த் * துளக்கற்று அமுதமாய் * எங்கும்
பக்கம் நோக்கறியான் * என் பைந்தாமரைக் கண்ணனே 2

2842 தாமரைக் கண்ணனை * விண்ணோர் பரவும் தலைமகனை * துழாய் விரைப்
பூமருவு கண்ணி * எம்பிரானைப் பொன்மலையை **
நாமருவி நன்கேத்தி உள்ளி வணங்கி * நாம் மகிழ்ந்தாட * நாவலர்
பாமருவி நிற்கத் தந்த * பான்மையே[1] வள்ளலே! 3

2843 வள்ளலே! மதுசூதனா! * என் மரதக மலையே! * உனை நினைந்து
எள்கல் தந்த எந்தாய்! * உன்னை எங்ஙனம் விடுகேன்? **
வெள்ளமே புரை நின் புகழ் குடைந்தாடிப் பாடிக் * களித்து உகந்துகந்து *
உள்ள நோய்கள் எல்லாம் துரந்து * உய்ந்து போந்திருந்தே 4

2844 உய்ந்து போந்து என்னுலப்பிலாத * வெந்தீவினைகளை நாசம் செய்து * - உனது
அந்தமில் அடிமை அடைந்தேன் * விடுவேனோ? **
ஐந்து பைந்தலை ஆடரவணை மேவிப் * பாற்கடல் யோக நித்திரை *
சிந்தை செய்த எந்தாய்! * உன்னைச் சிந்தை செய்து செய்தே 5

2845 உன்னைச் சிந்தை செய்து செய்து * உன் நெடுமாமொழி இசை பாடியாடி * - என்
முன்னைத் தீவினைகள் * முழுவேர் அரிந்தனன் யான் **
உன்னைச் சிந்தையினால் இகழ்ந்த * இரணியன் அகல்மார்வம் கீண்ட * என்
முன்னைக் கோளரியே! * முடியாததென் எனக்கே? 6

2846 முடியாததென் எனக்கேல் இனி? * முழுவேழுலகும் உண்டான் * உகந்து வந்து
அடியேனுள் புகுந்தான் * அகல்வானும் அல்லன் இனி **
செடியார் நோய்கள் எல்லாம் துரந்து * எமர் கீழ்மேல் எழுபிறப்பும் *

[1] பான்மையேய்

விடியா வெந்நரகத்து * என்றும் சேர்தல் மாறினரே 7

2847 மாறிமாறிப் பலபிறப்பும் பிறந்து * அடியை அடைந்து உள்ளம் தேறி *
ஈறிலின்பத்திருவெள்ளம் * யான் மூழ்கினன் **
பாறிப்பாறி அசுரர் தம் * பல்குழாங்கள் நீறெழ * பாய்பறவை ஒன்று
ஏறி வீற்றிருந்தாய்! * உன்னை என்னுள் நீக்கேல் எந்தாய்! 8

2848 எந்தாய்! தண்திருவேங்கடத்துள் நின்றாய்! * இலங்கை செற்றாய்! * மராமரம்
பைந்தாள் ஏழுருவ * ஒரு வாளி கோத்த வில்லா! **
கொந்தார் தண்ணண்துழாயினாய்! அமுதே! * உன்னை என்னுள்ளே குழைத்த -
எம்
மைந்தா! * வானேறே! * இனி எங்குப் போகின்றதே? 9

2849 போகின்ற காலங்கள் போய காலங்கள் * போகு காலங்கள் * தாய் தந்தை -
உயிர்
ஆகின்றாய்! * உன்னை நான் அடைந்தேன் விடுவேனோ? **
பாகின்ற தொல்புகழ் மூவுலகுக்கும் * நாதனே! பரமா! * தண்வேங்கடம்
மேகின்றாய்! * தண்துழாய் விரைநாறு கண்ணியனே! 10

2850 * கண்ணித் தண்ணண்துழாய் முடிக் * கமலத்தடம் பெருங்கண்ணனை * புகழ்
நண்ணித் தென்குருகூர்ச் * சடகோபன் மாறன் சொன்ன **
எண்ணில் சோர்வில் அந்தாதி * ஆயிரத்துள் இவையும் ஓர் பத்திசையொடும் *
பண்ணில் பாட வல்லார் அவர் * கேசவன் தமரே 11

**அடிவரவு:** வைகுந்தா சிக்கென தாமரை வள்ளலே உய்ந்து உன்னை
முடியா மாறி எந்தாய் போகின்ற கண்ணி கேசவன்